**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு**

**2014/2015 (December 2019)**

## GY 3213 உயிரினப் புவியியல் (Bio Geography)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

**1.** அ) உயிரினப் புவியியல் என்பதனை வரையறை செய்து, அதன் பிரிவுகளை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) "உயிரினப் புவியியல் என்பது நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு அறிவியல் கற்கையாகும்". இக் கூற்றினை உயிரினப் புவியியலின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆராய்க. (14 புள்ளிகள்)

**2.** அ) உணவுச்சங்கிலி மற்றும் உணவுவலை ஆகிய இரு பதங்களையும் வரையறுக்குக. (04 புள்ளிகள்)

ஆ) உணவுச் சங்கிலியின் பிரதான வகைகளை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

இ) சூழல் தொகுதி ஒன்றில் உணவுச்சங்கிலி மற்றும் உணவுவலை என்பவற்றின் முக்கியத்துவத்தினை உதாரணங்கள், வரைபடங்கள் மூலம் விளக்குக. (10புள்ளிகள்)

**3.** அ) உயிர்த்திணிவு (Biome) என்பதனை வரையறை செய்க. (03 புள்ளிகள்)

ஆ) உலகில் காணப்படும் பிரதான உயிர்த்திணிவுகளை வகைப்படுத்தி, அதில் ஏதாவது ஒன்றில் எதிர்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களையும் அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும் விளக்குக. (17 புள்ளிகள்)

## பகுதி II

4. "சூழற்றொகுதியின் கூறுகளும் அவற்றிற்கிடையேயான இடைத்தொடர்புகளும்" என் தலைப்பில் வரைபடங்கள், உதாரணங்கள் என்பவற்றை உள்ளடக்கி கட்டுரை வரைக.
(20 புள்ளிகள்)

5. "சூழற்றொகுதி ஒன்றின் தொடர்ச்சியான நிலைபேற்றிற்கு உயிர்ப்புவி இரசாயன வட்டங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்" இக்கூற்றிற்கான ஆதாரங்களை புனையாவரைபடங்களின் துணைக்கொண்டு விளக்குக.
(20 புள்ளிகள்)

6. "இயற்கை மற்றும் மானிட செயற்பாடுகளினால் உயிர்ப்பல்வகைமைகள் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றன". ஏற்றுக்கொள்கின்றீரா? ஆதாரங்களை முன்வைத்து விளக்குவதுடன், அவற்றை பாதுகாப்பதற்கான முகாமைத்துவத் திட்டங்களையும் விளக்குக.
(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) சூழல் தொகுதி ஒன்றில் பிரிகையாக்கிகளின் பங்களிப்பு

ஆ) சூழல்தொகுதி ஒன்றில் சக்திப்பாய்ச்சல்

இ) சூழலியல் கூம்பகங்கள் (10 x 2 = 20 புள்ளிகள்)